**வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி - 2019**
**------------------------------------------------------------------------------**

**1.1 அபிப்பிராயம்**
**-----------------**

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி இன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
**-------------------------------------------**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**
---------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) 2013,2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இரத்துச் செய்யப்பட்ட நகர்வுக்காக எல்பிஜீ காஸ் இறக்குமதிக்காக துறைமுகம் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி தீர்வை முறையே ரூபா 15.5 மில்லியன், ரூபா 15.1 மில்லியன் மற்றும் ரூபா 29.8 தொகையை கம்பனி செலுத்தியது. எவ்வாறாயினும், கம்பனி இதுவரை மீள அறவிடுவதற்கு எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையை மீள அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது மற்றும் சுங்கவரித்திணைக்களம் ஆரம்பகட்டமாக ரூபா 15.1 மில்லியன் திரும்பப் பெற உடன்பட்டது | நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |
| (ii) 31 திசெம்பர் 2019 திகதியிலுள்ளவாறு, மொத்த கொள்கலன் வைப்பு வருமதிகளில் ரூபா 5.2 மில்லியன் காணப்பட்டது. அதில் 4.55 மில்லியன் 2006 தொடக்கம் 2014 காலப்பகுதியுடன் தொடர்புடையது. முன்னைய ஆண்டு கணக்காய்வறிக்கையில் கூட இது போன்ற அந்தத் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து இல்லை | நிலுவைத் தொகையை மீட்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) 5.2.1 வழிகாட்டல் | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் செயற்பாட்டு திட்டத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 சனவரி 17 ஆந் திகதி கணக்காய்விற்கு கையளிக்கப்பட்ட பாதீட்டில் மூலதன செலவினங்கள் பாதீடு அடங்கும் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (ii) 8.3.2(ஆ) வழிகாட்டல் | மீளாய்வாண்டில் தலைவருக்கு வழங்கப்பட்ட ரூபா 2,269,737 உபகார கொடுப்பனவு ஏற்பாடுகளுக்கு மாறாக செலுத்தப்பட்டிருந்தது | | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (iii) 9.2 வழிகாட்டல் | பொதுமுயற்சி திணைக்களம், பொதுதிறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலையுடன் பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் அங்கீரித்தலை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) 9.3 வழிகாட்டல் | சபை மற்றும் அமைச்சு, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | செயற்பாட்டு முகாமைதிட்டத்தின் அடிப்படையில் அனைத்து உத்தியோகத்தர்கள் பதவியுயர்வுகள் வரிசை மேற்பார்வையாளர்கள், தொழிற்பாட்டு தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவ பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டன. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (v) 9.7 வழிகாட்டல் | சம்பளங்களும் மற்றும் படிகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் பொது திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரமின்றி திருத்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்திருக்கவில்லை. இதன் விளைவாக, நிறைவேற்று சம்பளப்பட்டியல் மாதம் ஒன்றிற்கு ரூபா 1,000,000 இருந்து ரூபா 38,000 வரை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படி திட்டங்கள் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுகள் பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| ஆ) 2015 யூன் 17 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் பீஈடி 3/2015 | | | |
| (i) பிரிவு 2.2 | தலைவர் மற்றும் இயக்குனரகள் சபையின் படிகளை தீர்மானிப்பதற்கு முன் நிதி அமைச்சின் ஒப்புதலையும் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையினையும் பெற்றுள்ளதா என்பதனை உறுதிப்படுத்த கணக்காய்விற்கு சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கடிதம் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (ii) பிரிவு 2.9 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக தலைவருக்கு வழங்கப்பட்ட படிகளில் கம்பனி ஈபிஎவ் மற்றும் ஈரிஎவ் செலுத்தியது | அவர் ஒரு நிறைவேற்று தலைவராகவும் நிரந்தர வெற்றிடமாகவும் காணப்பட்டதனால் இதனை இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது ஏஜிஎம்மில் அங்கீகரிப்பட்டது | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,148,509,547 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 391,443,422 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 1,757,066,125 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. கம்பனியினுடைய வருமானம் 10.66 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நிதிச் செலவு 93.43 சதவீதத்தால் குறைவடைந்தமை என்பன வருமான முன்னேற்றத்தின் பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தகவலின் படி, 2019 ம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்) | 2019 | 2018 |
|---|---|---|
| மொத்த இலாபம் (ஜீபீ) | 15.19 | 6.38 |
| தேறிய இலாபம் (என்பீ) | 4.99 | 1.01 |
| சொத்துமீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 7.16 | 1.53 |
| ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் (ஆர்ஓசிஇ) | 25.70 | 2.39 |

| திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | | |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 4.16 | 3.51 |
| விரைவு விகிதம் | 3.67 | 3.14 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 8.81 சதவீதம் மற்றும் 3.98 ஆல் அதிகரித்திருந்தது மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்து மீதான திரும்பல் மற்றும் ஈடுபடுத்திய முலதனம் மீதான திரும்பல் முறையே 5.63 சதவீதத்தால் மற்றும் 23.31 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டது. வருமானத்தினுடைய அதிகரிப்பு காரணமே முன்னேற்றத்தின் பிரதான காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் மற்றும் திரவத்தன்மை விகிதம் 0.65 மற்றும் 0.53 ஆல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் ஒரு முறையான சாத்தியவள ஆய்வு இல்லாமல் சிஎஸ்ஆர் நடவடிக்கைகளுக்கு இலவசமாக 100 சமய ஸ்தலங்களுக்கு ரூபா 8,070,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் எல்பிஜி பைப்லைன் மற்றும் கனமான எரிவாயு அடுப்புகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ் உபகரணங்களை நிறுவுவது 82 சமய ஸ்தலங்களுக்கு மட்டுமே நிறைவடைந்திருந்தது மற்றும் 317 இல் உள்ளக றபர் கோஸ் அவுட்டுடன் கூடிய 192 கனமான எரிவாயு அடுப்புகள் மற்றும் 89 இல் 18 மெயின்போல்ட் பொருட்கள் நீண்டகாலமாக மாபிமா களஞ்சியசாலையில் விளைவற்று இருந்தன. சபையால் குறிப்பிடப்பட்டபடி சமய ஸ்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனவா என்பதனையும், விநியோகஸ்தர்களுக்க வழங்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட சமய ஸ்தலங்களில் உடனடியாக நிறுவப்பட்டுள்ளதா என்பதனையும் உறுதிபடுத்த கணக்காய்வு செய்வதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. சபை தீர்மானத்திற்கு மாறாக சேவை வழங்குனர்கள் கேள்வி நடைமுறைகளினூடாக தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் சேவை வழங்குனர்களுடன் ஒப்பந்தங்கள் உள்ளதா என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லை. | கருத்துரை இல்லை. | சாத்திய வள ஆய்வுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும் மற்றும் கேள்வி நடைமுறைகளுடாக சேவை வழங்குனர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு காஸ் கம்பனியின் முன்னால் நிர்வாக நிறுவுனரினால் 1986 ம் ஆண்டில் ரூபா. 13 மில்லியன் பெறுமதியில் உருகொடவத்த நிலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலத்தின் உறுதி வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் கம்பனியின் பெயரின் கீழ் மாற்றி பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் கம்பனியினால் அந்த நிலம் கொள்வனவு செய்யயப்பட்ட திகதியிலிருந்து உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொலன்னாவ பிரதேச செயலகம் ‘‘உபயோகிப்பதற்கான உரிமை’’ என்ற கடிதத்தை வழங்கயுள்ளது மற்றும் கம்பனி உரிமைப்பத்திரம் தயாரிப்பது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்கின்றது. | காணியின் உரிமையை கம்பனிக்கு மாற்ற கம்பனி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |